

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப் பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 03.03.2025 | சென்னை தென்மேற்கு | தியாகராய நகர் | கோடம்பாக்கம் (ஐந்து விளக்கு) | வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, நா.அருண் |
| 2 | 03.03.2025 | தென்காசி வடக்கு | வாசுதேவநல்லூர் | காமராஜர் சிலை முன்பு, வாசுதேவநல்லூர் | ராஜகம்பீரன் அப்பாஸ், ரா.ரேவதி |
| 3 | 04.03.2025 | அரியலூர் | அரியலூர் | திருமானூர் | மில்டன், கனிமொழி |
| 4 | 04.03.2025 | திண்டுக்கல் மேற்கு | வேடசந்தூர் | எரியோடு | சூர்யாசேவியர், ராஜேஸ்வரி |
| 5 | 04.03.2025 | கோவை தெற்கு | சூலூர் | செலக்கரிச்சல், சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றியம். | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, பூங்கொடி |
| 6 | 04.03.2025 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | அரண்மனை முன்பு, இராமநாதபுரம் | **நாஞ்சில் சம்பத்**, கா.காயத்ரி |
| 7 | 04.03.2025 | தேனி தெற்கு | கம்பம் | காந்தி சிலை அருகில். ஒடைப்பட்டி பேரூர் | ராஜகம்பீரன் அப்பாஸ், ஜெ.சிந்துஜா |
| 8 | 05.03.2025 | அரியலூர் | ஜெயங்கொண்டம் | மீன்சுருட்டி | மருத்துவர்.ப.மீ.யாழினி, தீன்ஷா நூப் |
| 9 | 05.03.2025 | திண்டுக்கல் மேற்கு | நத்தம் | கோபால்பட்டி | **நாஞ்சில் சம்பத்,** கேத்தரின் மெர்லினா |
| 10 | 05.03.2025 | கன்னியாகுமரி கிழக்கு | குளச்சல் | மணவாளக்குறிச்சி | சூர்யாசேவியர், ஏஞ்சலின் |
| 11 | 05.03.2025 | கன்னியாகுமரி மேற்கு | பத்மநாபபுரம் | வேர்கிளம்பிச் சந்திப்பு | ராஜகம்பீரன் அப்பாஸ், சி.ஜனனி |
| 12 | 05.03.2025 | சிவகங்கை | காரைக்குடி | ஐந்து விளக்கு, காரைக்குடி நகரம் | துரை.சம்பத், பீ.ஜோஷி அபர்ணா |
| 13 | 05.03.2025 | திருவண்ணாமலை வடக்கு | வந்தவாசி | கோட்டை மூலை, வந்தவாசி நகரம் | மில்டன், த.கௌசல்யா |
| 14 | 05.03.2025 | சென்னை தென்மேற்கு | மயிலாப்பூர் | செயின்ட் மேரீஸ் சாலை, விசாலாட்சித் தோட்டம் | சைதை சாதிக், சாய் ரித்திக் |
| 15 | 06.03.2025 | சென்னை மேற்கு | அண்ணா நகர் | பெருமாள்கோயில் தெரு, அரும்பாக்கம் | **நாஞ்சில் சம்பத்,** ஜெயகுமரேஷ் |
| 16 | 06.03.2025 | திருவள்ளூர் கிழக்கு | கும்மிடிப்பூண்டி | பனப்பாக்கம், பெரியபாளையம் | தமிழ் கா.அமுதரசன், ஆஷிகா பர்வீன் |
| 17 | 06.03.2025 | திருச்சி தெற்கு | மணப்பாறை | மணப்பாறை நகரம். | மருத்துவர்.ப.மீ.யாழினி, பாலகணபதி |
| 18 | 06.03.2025 | திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி | வகையாடி முனை, திருநெல்வேலி நகரம் | சூர்யா சேவியர், சே.ரகுமாள் |
| 19 | 06.03.2025 | சிவகங்கை | சிவகங்கை | சண்முகராஜா கலையரங்கம். | செந்தில்வேல், ஞா.சந்தியா |
| 20 | 06.03.2025 | திருவண்ணாமலை வடக்கு | போளூர் | அண்ணா சிலை அருகில், போளூர் நகரம் | கோவி.லெனின், அ.தமிழரசி |
| 21 | 06.03.2025 | விருதுநகர் தெற்கு | அருப்புக்கோட்டை | நேரு மைதானம், அருப்புக்கோட்டை | திருச்சி **என்.சிவா** எம்.பி., மு.இராமச்சந்திரன் |
| 22 | 06.03.2025 | திருப்பூர் தெற்கு மாவட்டம் | காங்கேயம் | வெள்ளக்கோவில் | இந்திரகுமார் தேரடி, திருமேனி |
| 23 | 07.03.2025 | சென்னை மேற்கு | சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி | பஜார் தெரு, அய்யா முதலித் தெரு சந்திப்பு, சிந்தாதிரிப்பேட்டை. | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, தி.கோகுல் |
| 24 | 07.03.2025 | சென்னை தெற்கு | விருகம்பாக்கம் | விருகம்பாக்கம் மார்க்கெட் சாலை | மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., அ.தா.டெக்சின் ரொமேரியோ |